பதிவு எண். M. 6331 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: மார்கழி 16 (31—12—71) வெள்ளி   வெளியூர்: மார்கழி 17 (1—1—72) சனி [இதழ்: 166

போர் வீரர்களே — விழிப்புடன் இருங்கள்!

புதுடில்லி, டிச. 31—

"போர் நிறுத்தத்தைப் பாகிஸ்தான் ஒப்புக்கொண்டு விட்டபோதிலும், நமது படை வீரர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்; ஏனெனில், பாகிஸ்தான் பேசும் பேச்சுக்களிலிருந்து, 'அடுத்து என்ன நடக்கும்' என்பதை எவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை"

என்று, டெலிவிஷனில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்

(2-ம் பக்கம் பார்க்க)

'விக்ராந்த்' வீரர்கட்கு சென்னையில் வரவேற்பு

வீரச் சாதனைக்கு வெற்றித் திலகம்

அமைச்சர்கள் சத்தியவாணிமுத்து — அன்பில் தர்மலிங்கம் பாராட்டு

சென்னை, டிச. 31—

இந்தியா — பாகிஸ்தான் போரில் அருஞ்சாதனைகள் புரிந்த விமானத் தாங்கிக் கப்பலான ஐ. என். எஸ். விக்கிராந்த்'தும், 'ஐ என். எஸ். கமாண்டு'ம் இன்று சென்னைத் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தபோது மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தமிழக அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் கப்பல் காப்டன்களுக்கும், விருது பெற்ற வீரர்களுக்கும் வெற்றித் திலகமிட்டு மாலையணிவித்து வரவேற்றார்.

கப்பலிலிருந்து காப்டன்கள் உட்பட 10 பேர் இறங்கி வந்தனர்; இவர்கள், மகா வீர் சக்கர' விருதும் — இதர விருதுகளும் பெற்றவர்கள் ஆவர்.

இவர்களை வரவேற்றும் — பாராட்டியும் அமைச்சர் சத்தியவாணிமுத்து, அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், திருமதி கிளப்வாலா ஜாதவ் ஆகியோர் பேசினர்.

சாராபாய் உருவச் சிலை

தும்பாவில் அமைக்கப்படும்

புதுடில்லி, டிச. 31—

"சாராபாய் நினைவாக தும்பா இரயில் நிலையத்தில், மார்பளவு உருவச் சிலை ஒன்று அமைக்கப்படும்"

என்று இரயில்வே அமைச்சர் திரு. அனுமந்தையா அறிவித்தார்.

உடல் தகனம்

விஞ்ஞானி விக்ரம் சாராபாயின் உடல் இன்று காலை ஆமதாபாத்திற்கு 14 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அவரது சொந்த ஊரில் தகனம் செய்யப்பட்டது.

ஆமதாபாத்திலுள்ள அவரது மூதாதையர் இல்லத்திலிருந்து அவரது உடல் எடுத்துச் செல்லப்பட்டபோது ஆயிரக்கணக்கான மக்கள் கூடிநின்று கண்ணீர் வடித்தனர்.

குசராத் கவர்னர் ஸ்ரீமன் நாராயணன், கேரள அமைச்சர் திரு. கருணாகரன் ஆகியோரும் சவ ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

நினைவுப் பதக்கம்

சாராபாய் நினைவுப் பதக்கம் ஒன்றை ஏற்படுத்த இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை முடிவு செய்திருக்கிறது.

'பிணக்குக்குப் பொறுப்பாளி இந்தியா அல்ல'

அமெரிக்க நட்புறவு குறித்து இந்திரா காந்தி

'சீனவுடன் உறவு நிலை மோசமடையவில்லை' எனக் கருத்து

புதுடில்லி, டிச. 31—

'இந்தியாவுக்கும் — அமெரிக்காவுக்குமிடையிலான நட்புறவில் பிணக்கு ஏற்பட்டதற்கு இந்தியா பொறுப்பு ஆகாது"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி இன்று இங்கு தெரிவித்தார்.

நிருபர்களின் பல்வேறு கேள்விகட்கும் பதிலளித்த இந்திரா காந்தி தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

"போரில் இந்தியாவுக்கு நம்பிக்கையே கிடையாது.

பூட்டோவின் உரையில் பல்வேறு நிலைமைகள் தெரிகின்றன.

பாகிஸ்தானில் எல்லாமே ஒழுங்காக ஏற்படும் வரை அவகாசம் அளிக்கவேண்டும்.

அமெரிக்காவுடன் நட்புறவை இந்தியா மதிக்கிறது; இன்னமும் அதனை விரும்புகிறோம்; ஆனால் நிலைமையின் உண்மையை அது உணர்ந்து செயல்பட வேண்டும்.

சீனவுடன் மாமூலான உறவினை ஏற்படுத்திக்கொள்ளவே இன்னமும் விரும்புகிறோம்; சீன— இந்திய உறவு மோசமடைந்திருப்பதாக நான்கருதவில்லை."

பூட்டோவின் தாராளம்!

இராவல்பிண்டி, டிச. 31—

'கிழக்குப் பாகிஸ்தானுக்கு எவ்வளவு சுயாட்சி வேண்டுமோ அவ்வளவு சுயாட்சியையும் முஜிபுர் ரகிமான் வைத்துக் கொள்ளலாம்"

என்று பாகிஸ்தான் அதிபர் பூட்டோ முஜிபுர் ரகிமானிடம் கூறியதாக, 'பாகிஸ்தான் டைம்ஸ்' என்ற பத்திரிகை கூறியது.

ஆனால், 'இது ஒரு நிபந்தனைக்குட்பட்டது' என்று அவர் கூறினாராம்; 'ஒரே பாகிஸ்தான் என்ற கட்டுக்கோப்பின்கீழ் பாகிஸ்தானின் இரண்டு பிரிவுகளையும் வைத்திருக்க ஒரு வழி காணப்பட வேண்டும்' என்பதே அந்த நிபந்தனையாகும்.

பூட்டோவின் புதிய பிதற்றல்!

இந்தியாவுடன் நட்புறவை நாடுவதாகப் பசப்புகிறார்

புதுடில்லி, டிச. 31—

"பாகிஸ்தானிடம் தன் கொள்கையை இந்தியா மாற்றிக் கொண்டு — அதை ஒரு சுதந்தர நாடாக அங்கீகரித்தால், நாளைக்கே இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளைப் பாகிஸ்தான் அதிபர் பூட்டோ கூறியிருக்கிறார்.

"தன் அண்டை நாடுகளுடன் — குறிப்பாக இந்தியாவுடன் சமாதானமாக வாழப் பாகிஸ்தான் விரும்புகிறது"

என்று அவர், கல்வியாளர்கள் — எழுத்தாளர்கள் — கலைஞர்கள் ஆகியோரிடையே பேசுகையில் கூறினார்.

"பாகிஸ்தான் ஒரு சிறிய நாடு; இந்தியா — இரஷ்யா — பூடான் — நேபாளம் — இலங்கை ஆகியவற்றுடன் நட்புறவை அது விரும்புகிறது"

என அவர் கூறியதாகப் பாகிஸ்தான் வானொலி தெரிவித்தது.

"இந்தியா இருப்பதைப் பாகிஸ்தான் வேண்டாவெறுப்புடன் ஏற்றுக் கொண்டுள்ளது; ஆனால், பாகிஸ்தான் உருவாகியதை இந்தியா ஒரு போதும் ஏற்றுக்கொள்ளவில்லை' என்றும் அவர் கூறினார்.

'பாகிஸ்தான் மக்களின் உண்மையான பிரதிநிதி' என்ற ரீதியில் இந்தியாவுடன் பேசப்போவதாகவும், ஆனால், 'நாட்டின் கௌரவத்துக்கு ஏற்றதாக இல்லாத எதையும் செய்யப்போவதில்லை' என்றும் அவர் கூறினார்.

ஒரே இடத்தில் 20,000 பிணங்கள்

பாகிஸ்தான் இராணுவத்தின் அக்கிரமம்

புதுடில்லி, டிச. 31—

கடந்த 9 மாதங்களில் மட்டும் வங்காள தேசத்தில் உள்ள குல்னா மாவட்டத்தில் 50,000 பேர்களைப் பாகிஸ்தான் இராணுவத்தினர் கொன்றிருக்கின்றனர்.

இப்படிக் கொலை செய்யப்பட்டவர்களின் பிணங்களைப் பாகிஸ்தான் இராணுவத்தினர் குல்னா நகரத்தில் உள்ள வானொலி நிலையம் அருகே கொண்டுவந்து போட்டதாகத் தெரிகிறது.

இந்தப் பிணக்குவியல் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டது. இங்கு மட்டும் ஒரே இடத்தில 20,000 பிணங்கள் கிடந்தன.

பக்கத்து வீடுகளில் குடியிருந்த மக்கள், அந்தப் பிணக்குவியலுக்கு ஓடிச்சென்று தங்களது உறவினர்களின் பிணம் எதுவும் இருக்கிறதா என்று தேடிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

ரகிமான் விடுதலை மூலமே அமைதி

ஐ. நா. தூதுக் குழுவிடம் அறிவிப்பு

புதுடில்லி, டிச. 31—

'ஷேக் முஜிபுர் ரகிமானை விடுதலை செய்வதன்மூலமே இந்தியத் துணைக் கண்டத்தில் பதட்ட நிலையைக் குறைத்து அமைதியை நிலைநாட்ட முடியும்"

என்று இங்குள்ள வங்காள தேசத் தூதரகம், ஊ-தாண்டின் சிறப்புப் பிரதிநிதிகளிடம் திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

முஜிபுரை வைத்து பேரம் பேசுவதா?

பாகிஸ்தானுக்கு டி. பி. தார் அறிவுறுத்தல்

புதுடில்லி, டிச. 31—

"நமது பாதுகாப்பில் உள்ள மேற்குப் பாகிஸ்தான் அதிகாரிகள்— குடிமக்களுக்கு (இராணுவத்தினர் அல்லாதவர்கள்) ஆகியோர் பற்றி நாம் சட்டபூர்வமாக அக்கறை கொண்டிருக்க வேண்டியதுதான்; ஆனால், மேற்குப் பாகிஸ்தானில் உள்ள 5 இலட்சம் வங்காளியர்களின் கதிபற்றி எவரும் கவலைப்படுவதாகத் தோன்றவில்லை; அந்த வங்காளியர்கள் மோசமாக நடத்தப்படுகிறார்கள் என்று பூட்டோவே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

"'அவர்களுக்குப் பதிலாக இவர்கள்' என்ற முறையில் ஆள் மாற்றம் செய்து [illegible] ஷேக் மு[illegible]ர் ரகிமானை உட்படுத்தும்பிரச்[illegible]யே கிடையாது.

"ஷேக் முஜிபுர் ரகிமான் வங்காள தேசத்தின் தந்தை; ஒரு சுதந்தரமான நாட்டிற்கு அவர் தலைவர்; இராணுவத்தினர் அல்லாத எந்த ஊழியர்களுடனும் அவரைச் சமப்படுத்தும் பிரச்சினை எழவே இல்லை"

என்று வங்காள தேசத்திற்கு இந்தியாவின் தூதராகச் சென்ற டி.பி. தார் விளக்கியிருக்கிறார்.

குடிசைக்குள் ரூ. 10-இலட்சம்

கள்ளக் கடத்தல் சரக்கு பிடிபட்டது

மங்களூர், டிச. 31—

இங்கு குஜ்ஜார்பேட்டை கடற்கரைப் பகுதியில் குடிசை ஒன்றிலிருந்து சுமார் ரூ 10 இலட்சம் மதிப்புடைய கள்ளக் கடத்தல் பொருட்களை சுங்கத் துறையினர் கைப்பற்றியிருக்கின்றனர்.

இவைகள், துபாயிலிருந்து கொண்டுவந்ததாகக் கருதப்படுகிறது.

இது தொடர்பாகக் கேரளத்தைச் சேர்ந்த 9-பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இரண்டு நாட்டுப் படகுகளும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

போலீசு அதிகாரி வீட்டில் ரூ. 3.50 இலட்சம்

தங்கம் — வெள்ளி நகைகள் கைப்பற்றப்பட்டன

பம்பாய், டிச. 31—

தானா பகுதி போலீசு இன்ஸ்பெக்டர் ஒருவரின் வீட்டைச் சோதனையிட்டு, இலஞ்சத் தடுப்பு அதிகாரிகள், ரூ. 3.50 இலட்சம் மதிப்புடைய தங்கம் — வெள்ளி நகைகள் மற்றும் நோட்டுகளைக் கைப்பற்றியிருக்கின்றனர்.

இவர் மீது வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

போர்க் கைதிகள் இந்தியா வருகை

டாக்கா, டிச. 30—

"கிழக்கு வங்க தேசத்திலிருந்து பாகிஸ்தான் போர்க் கைதிகளை அழைத்துவருவது செவ்வனே நடைபெறுகிறது"

என்று இங்கு வெளியிடப்பட்ட அதிகாரபூர்வமான செய்தித் தாள் குறிப்பு கூறியது.

வரும் வாரங்களில் படிப்படியாக 45,000 பாகிஸ்தான் துருப்புக்களும் — மற்றவர்களும் டாக்காவிலிருந்து அனுப்பப்படுவார்கள்.

கடந்த இரு நாட்களில் சுமார் 4,000 கைதிகள் நாராயண்கஞ்சுக்கு அனுப்பப்பட்டார்கள்; அங்கு இந்தியா செல்லும் கப்பல்களில் அவர்களை ஏற்றி அனுப்புவதற்குத் தனிப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அறிவிப்பு

நாளை தமது அலுவலகத்துக்கு விடுமுறையாகையால், 'நம்நாடு' அடுத்த இதழ் 3-1-72 அன்று சென்னையிலும், மறுநாள் வெளியூர்களிலும் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

—பொறுப்பாளர்

பயிற்று மொழி மாற்றத்தால் பாதகம் ஒன்றுமில்லை

ஆங்கில மொழிக் கல்வியை மேலும் செம்மைப்படுத்த நடவடிக்கை

மூன்றும் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிப்பது தென்னகத்தில் தமிழகம் ஒன்றுதான்

ஆசிரியர்கள் மாநாட்டில் கல்வியமைச்சர் நாவலர் விளக்கவுரை

திருச்சி, டிச. 31—

"மூன்றும் படிவத்திலிருந்தே ஆங்கிலம் சொல்லித் தருவது தென் மாநிலங்களிலேயே தமிழ்நாடு ஒன்றுதான்; இந்தியா முழுவதையும் எடுத்துக்கொண்டால், இவ்வகையில் சில மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றுகும்; 'ஆங்கிலம் கற்பிப்பதை ஐந்தாம் வகுப்பிலிருந்துதான் துவங்க வேண்டும்' என்று மத்தி[illegible]யமைச்சக ஆய்வுக் குழு தெரிவித்த கருத்தைத் தமிழ்ந[illegible]ஏற்கவில்லை"

என்று கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தெளிவுபடுத்தினர்.

திருச்சி லாலி மண்டபத்தில் நடைபெற்ற 22-வது ஆசிரியர்கள் மாநாட்டை, நாவலர் துவக்கி வைத்துப் பேசினர்.

சென்னைப் பல்கலைக் கழக ஆதரவில் நடைபெற்ற இந்த மாநாட்டுக்கு ஒரிசா கல்வி இயக்குநர் பிதாஸ் தலைமை வகித்தார்.

பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர் உட்பட நாட்டின் பல பாகங்களிலிருந்தும் 800 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

தமிழ் பயிற்சிமொழியாக்கப்பட்டதால் ஆங்கிலம் பாதிக்கப்படவில்லை என்றும், இனியும் பாதிக்கப்படமாட்டாது என்றும் விளக்கமளித்து, நாவலர் மேலும் பேசியதாவது:—

"தமிழக அரசு, வரும் கல்வியாண்டிலிருந்து பள்ளிக்கூடங்களில் மூன்றும் படிவத்திலிருந்தே ஆங்கிலம் படிக்கவும் — எழுதவும் சொல்லித் தரத் திட்டமிட்டிருக்கிறது; குழந்தைகளுக்கு ஆங்கிலத்தில் பேசிப் பழகவும் சொல்லித் தரப்படும்.

தமிழக அரசு கொள்கை ரீதியாகவும், உரிய காரணங்களின் பேரிலும், பள்ளிகளிலும் — கல்லூரிகளிலும் வட்டார மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்டுள்ளபோதிலும், அது ஆங்கிலத்தைப் புறக்கணிக்கவில்லை; அதன் இரு மொழிக் கொள்கை பல தடவை தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது; ஆங்கிலத்திலுள்ள விஞ்ஞானக் கலைச்சொற்களுக்குச் சரியான தமிழ்ச்சொற்களைக் கண்டுபிடிக்க முழு முயற்சி செய்ய வேண்டும்; சாதாரண மனிதன் புரிந்துகொள்ளக்கூடிய புதிய வார்த்தைகளைக்கூட உருவாக்கலாம்; சிக்கலான சில தொழில்நுணுக்க வார்த்தைகளுக்கு அனைத்துநாட்டு அளவில் வழக்கில் இருக்கும் சொற்களையே ஏன் வைத்துக்கொள்ளக்கூடாது என்று எனக்குத் தெரியவில்லை.

மாணவர் உயர்நிலைக் கல்வியை முடிக்கும்போது ஆங்கிலத்தில் நன்றாக எழுதவும் — படிக்கவும் — பேசவும் தெரிந்திருக்கும்படி ஆங்கில ஆசிரியர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஆங்கிலத்தில் குறைந்தபட்ச மதிப்பெண் வாங்கி எஸ்.எஸ்.எல்.சி.-யில் தேறுவதற்கு உதவுவது மட்டும் போதாது; இந்த நோக்குடன் கற்பித்தல் கூடாது.

கடந்த சில ஆண்டுகள் வரையில் ஆங்கிலத்தைக் கட்டாய மொழியாக்கி, 'ஆங்கிலத்தில் இவ்வளவு மதிப்பெண் வாங்கினால்தான் உயர்நிலைப் பள்ளிப் பரீட்சையில் தேற முடியும்' என்று வைத்திருந்த சில மாநிலங்கள் இப்போது ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை நீக்கி — கல்லூரிகளில் சேருவதற்கும் அதை அவசியமில்லாததாகச் செய்திருப்பது வருந்தத்தக்கது.

எஸ்.எஸ்.எல்.சி.-யில் ஏராளமானோர் ஆங்கிலத்தில் தவறி விடுவது இதற்குக் காரணமாக இருக்கலாம்.

சில மாநிலங்களில் ஆங்கிலத்தை விருப்பப் பாடமாகச் செய்திருக்கிறார்கள்; மற்றும் சில மாநிலங்களில் அதை ஒரு உபரி வினாத்தாளாக்கி, 'பரீட்சையில் தேற ஆங்கிலத்தில் தேறுவது அவசியமில்லை' என்று செய்திருக்கிறார்கள்.

ஒரு மாநிலத்தில் ஒரு மாணவன் ஆங்கிலத்தை எடுத்துக் கொண்டிருந்தால், பதிவு ஏட்டில் அதை வெறுமனே பதிவு செய்வதோடு சரி — என்றிருக்கிறது; இப்படிப் போய்க் கொண்டிருந்தால், நாட்டின் சில பகுதிகளில் கல்லூரிகளில் சேர வரும் மாணவர்களுக்கு ஆங்கிலமே தெரியாது என்ற நிலைமை ஏற்பட்டுவிடும்; அப்படி ஏற்படாமல் தவிர்க்க வேண்டும்.

ஆங்கிலத்தை மூல மொழியாகப் பயன்படுத்த எல்லாப் படிப்புகளிலும் மொழிபெயர்ப்பு இடம் பெற வேண்டும்; ஆங்கிலத்திலிருந்து தாய்மொழிக்கும் — தாய்மொழியிலிருந்து ஆங்கிலத்துக்கும் மொழிபெயர்ப்பு படிப்படியானதாக அமைய வேண்டும்; மேல படிப்புகளில் இதைக் கட்டாயமாக வைக்க வேண்டும்.

வழக்கம்போல் வெறும் தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டுப் போய் விடாமல் உருப்படியாக நடத்தி வைக்கக்கூடிய திட்டத்தை மாநாடு உருவாக்கவேண்டும்."

சிண்டிகேட் கட்சியின் பெயர்

தேர்தல் ஆணைக் குழு அறிவிப்பு

புதுடில்லி, டிச. 31—

"சிண்டிகேட் காங்கிரசின் பெயர் 'இந்தியத் தேசியக் காங்கிரசு (ஸ்தாபனம்)' என்று அழைக்கப்படும்"

என்று தலைமைத் தேர்தல் ஆணையர் சென் வர்மா அறிவித்தார்.

தேர்தல் சின்னங்களை ஒதுக்கும் பிரச்சினைக்காக அந்தக் கட்சியின் பெயர் இவ்வாறு அழைக்கப்படும் என்று அறிவிக்கும் ஓர் ஆணையை சென் வர்மா வெளியிட்டார்.

'ஒரு பெண் நூற்கும் நிலையில் உள்ள இராட்டை', சிண்டிகேட் காங்கிரசின் சின்னமாக நாடு முழுவதும் ஒதுக்கப்படும்.

சிண்டிகேட் காங்கிரசை, ஒரு தேசியக் கட்சி என்றும தேர்தல் கமிஷன் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

காங்கிரசு ஆட்சியை மிஞ்சும் கலைஞரின் சாதனை

இரயில்வே அமைச்சர் அனுமந்தையா பாராட்டு

மதுரை மேம்பாலத் திறப்பு விழாவில் உரை

மதுரை, டிச. 30

"இந்தியாவில் ஏறத்தாழ 41,000 மேம்பாலங்கள் கட்டப்பட வேண்டியிருக்கிறது; இதற்குப் பொதுமக்களின் நல்ல ஒத்துழைப்பு இருந்தால்தான் முடியும்; இவையெல்லாம் கட்டி முடிக்கப்பட்டால் நாட்டின் நிரந்தரச் சொத்தாக இருக்கும்.

'தமிழ் நாட்டில் எத்தனைப் பாலங்கள் கட்டுவதற்கு அனுமதி கேட்டாலும் தரத்தயார்; இப்படிச் செய்வது, யாருக்கோ உதவுவதாக அர்த்தமல்ல; எனக்கு நானே உதவி செய்துகொள்வதாகத்தான் பொருள்"

என்று, மத்திய இரயில்வே அமைச்சர் திரு. கே. அனுமந்தையா அவர்கள் சுட்டிக்காட்டிக் கூறினர்.

மதுரை மாற்றுப் பாதை மேம்பாலத்தைத் திறந்துவைத்து திரு. அனுமந்தையா பேசினர்.

இவ்விழாவுக்கு முதலமைச்சர் கலைஞர் தலைமை வகித்தார்.

விழாவுக்கு வந்திருந்தவர்களை மேயர் எஸ். முத்து எம்.எல்.சி. வரவேற்றார்.

பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்களும் விழாவில் கலந்துகொண்டு பேசினர்.

தமிழகத்தில் மேம்பாலங்களை அதிக அளவில் விரைந்து கட்டுவதில் ஆர்வம் காட்டிச் சாதனை புரிந்துள்ள முதல்வர் கலைஞரை, திரு. அனுமந்தையா மனமாரப் பாராட்டினர்; அவர் பேசியதாவது:—

"இந்த மேம்பாலத் திட்டம் பற்றி 1971 மே மாத நிதி நிலை அறிக்கை விவாதத்தின்போதே பேசினேன்; 'இந்தப் பாலம் விரைவில் முடிந்துவிடும்; அந்த அளவுக்கு மாநில அரசினர் அக்கறையோடு செயல்பட்டு வருகிறார்கள்' என்று தெரிவித்தேன்; இப்போது இந்த விழாவிலும் கலந்துகொள்வது பெருமகிழ்ச்சியைத் தருகிறது

என்னுடைய விருப்பமும் ஆசையும், 'மேம்பாலங்கள் அனைத்தும் கட்டி முடிக்கப்பட வேண்டும்' என்பதுதான்.

எந்த நாட்டிலுமே போக்குவரத்து மட்டும் மிகுந்த சீராக இருக்க வேண்டியது அவசியம்.

லெவல் கிராசிங்குகளால் போக்குவரத்தில் வீண் தாமதம் ஏற்படுகிறது; இதனால் எவ்வளவோ இழப்பு ஏற்படுகிறது.

41,000 லெவல் கிராசிங்குகளிலும் போக்குவரத்துத் தடைபடுவதால் ஏற்படும் பெட்ரோலினைக் கணக்கெடுத்தால், அதைக் கொண்டே மேம்பாலங்களை [illegible]லாம் கட்டி முடித்துவிடலாம்.

முன்னேற்றம் என்பதே, வேகமாக நடப்பதுதான்; வேகம் த[illegible]ம்போது முன்னேற்றமும் தடைபடும்; ஆகவே, எல்லா லெவல் கிராசிங்குகளிலும் மேம்பாலங்கள் கட்டப்பட வேண்டும்.

எனக்கு ஏற்பட்டுள்ள வருத்தமெல்லாம், இந்த வேலைகளுக்காக மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட ரூ. 12 கோடி செலவிடப்படாமல் திரும்பி வந்துவிட்டதுதான்; அதனால்தான் நான், எல்லா முதலமைச்சர்களுக்கும் கடிதம் எழுதி, 'இதுபோன்ற திட்டங்களையெல்லாம் விரைவில் முடித்துக்கொள்ளுங்கள்' என்று கேட்டுக்கொண்டேன்.

இரண்டோர் அமைச்சர்கள்தான் அதனை நிறைவேற்ற முன்வந்தார்கள்.

அப்படி முன்வந்தவர்களுக்கு — மேம்பாலப் பணிகளில் ஈடுபட்டவர்களுக்குப் பரிசு தருவதென்றால், மைசூர் மாநிலம் முதல் பரிசையும், இரண்டாவது பரிசைத் தமிழகமும் பெறும்.

மைசூரில் 41 மேம்பாலங்கள் என்றால் தமிழ்நாட்டில் 25 பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன; இதுவும் பெரிய காரியம்தான்.

கடந்த 20 ஆண்டுக் காலத்தில் — கருணாநிதி ஆட்சிக்கு முன்பு — 10 மேம்பாலங்கள்தான் கட்டப்பட்டன; இந்த ஆட்சி வந்த பிறகு, இந்த குறுகிய காலத்திலேயே மேலும் 15 மேம்பாலங்களைக் கட்டியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட பணிகளால்தான் கருணாநிதியின்மீது எனக்கு அதிக மதிப்பு ஏற்படுகிறது.

நிலத்தைக் கையகப்படுத்தும் காரியங்களாலும் — காண்டிராக்டர்களாலும்தான் காலதாமதங்கள் ஏற்படுகின்றன.

மேம்பாலங்களைக் கட்டிமுடிக்காததால் ஏற்படும் இழப்புகளை, கட்டிமுடிக்கப்பட்டால் ஈடு கட்டிவிட முடியும்.

மேலும் கட்டிமுடிக்கப்படவிருக்கும் இரண்டு பாலங்களைத் திறக்க நீங்கள் வரவேண்டும் — என்று முதலமைச்சர் கேட்டுக் கொண்டிருக்கிறார். அதற்காக முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்; மகிழ்ச்சியோடு வந்து திறக்கிறேன்."

மாநகராட்சி நிலைக் குழுக்கள்

தலைவர்கள் தேர்வு

சென்னை, டிச. 31—

சென்னை மாநகராட்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள குழுக்களுக்குத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெற்றது.

தேர்தல் கூட்டத்துக்கு மேயர் திருமதி காமாட்சி செயராமன் தலைமைதாங்கினர்.

நிதி மற்றும் வரி விதிப்புக் குழுவிற்கு பழைய மேயர் வி. முனுசாமியும், கல்விக் குழுவிற்கு ஜி. லட்சுமிபதியும், பணிக் குழுவிற்கு டி. எஸ் நல்லதம்பியும், சுகாதாரக் குழுவிற்கு மு அரங்கநாதனும், நகரமைப்புக் குழுவிற்கு சி. கோவிந்தராசனும், கணக்குக் குழுவிற்கு டி. வெங்கடேசனும் தலைவர்களாகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

காவிரி நீர்ப் பிரச்சினையில் தீர்வு

அனுமந்தையா நம்பிக்கை

மதுரை, டிச. 30—

"தமிழ்நாட்டுக்கும் — கருநாடக மாநிலத்திற்கும் இடையே இருக்கின்ற பண்பாடு ஒன்றுதான்.

"காவிரி மைசூரில் உற்பத்தியாகி — அந்த மாநிலத்தில் பாய்ந்து — தமிழ்நாட்டில் இ[illegible] சக்கணக்கான ஏக்கர் நிலங்களில் விளைச்சலையும், மின்சாரத்தையும் தந்து வருகிறது.

"காவிரி நமக்குப் பொதுவான தாய்; 'யாருக்குச் சொந்தம்' என்று ஏன் சண்டை போட்டுக்கொள்ள வேண்டும்?

"இந்திரா காந்தி தலைமையிலுள்ள நான் மகிழ்ச்சியோடு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்; மைசூரில் நடைபெறவிருக்கும் தேர்தலில் இந்திரா காங்கிரசுக் கட்சி வெற்றி பெற்று அமைச்சரவை அமைக்கும்; அந்த அமைச்சரவையும் — தமிழ்நாட்டில் கருணாநிதி தலைமையில் அமைந்துள்ள அமைச்சரவையும் இந்தப் பிரச்சினையை நல்ல முறையில் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

"எப்படிக் காவிரி வற்றுத ஆறோ, அதுபோல், இரு மாநில நட்பும் — அன்பும் வற்றுது இருக்கவேண்டும்."

—மதுரை மேம்பாலத் திறப்பு விழாவில்

பெரிய மருத்துவ மனைகளில் திரையரங்குகள் நிறுவப்படும்

நோயாளிகள் பயனுறும் வகையில் கருத்துப் படங்கள் காட்டப்படும்

மதுரை, டிச. 30—

செய்தியாளர் :—"தாங்கள் அமெரிக்கா சென்று வந்ததன் விளைவாகத் தமிழகத்தில் புதிதாகத் திட்டம் ஏதேனும் துவங்கப்படுமா?"

முதலமைச்சர் :—"அமெரிக்க அரசுடன் கலந்துகொண்டு எதுவும் செய்வதாக இல்லை; அங்குள்ள திட்டங்களின் மாதிரிகளை வைத்துக்கொண்டு இங்கே செய்ய முடியும்; அமெரிக்கா மட்டுமல்லாமல் பொதுவாக வெளிநாடுகளுக்குச் சென்றுவரும் நாம் — '[illegible]வற்றை நம் நாட்டில் அறிமுகப்படுத்த வேண்டும்' என்ற [illegible]ர்வைப் பெறுகிறோம்; நமது நாட்டின் வசதி வாய்ப்புக்களுக்[illegible]ற்றவாறு படிப்படியாக அவற்றை நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கிறோம்."

கேள்வி :—"உடனடியாக ஏதாவது செய்யும் எண்ணம் உண்டா?"

முதல்வர் :—"சென்ற ஆண்டில் நான் ஐரோப்பாவுக்குச் சென்றிருந்தபோதும் — இந்த ஆண்டு அமெரிக்கா சென்ற நேரத்திலும், இந்தியாவில் — குறிப்பாகத் தமிழகத்தில் — தீவிரமாகச் செயல்படுத்த வேண்டிய திட்டம், 'சத்துணவுத் திட்டம்' என்று உணர்ந்து, மேலும் விரிவாக அதனைச் செயல்படுத்தும் வாய்ப்புக் கூறுகளை ஆராய்ந்து வருகிறோம். வெளிநாடுகளில் அனைத்துப் பிரச்சினைகளும் கருத்து விளக்கமாகப் பொதுமக்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன; அந்த முறை இங்கும் பரவலாக்கப்பட வேண்டும்; உதாரணமாக, வெளிநாடுகளில் பெரிய மருத்துவ மனைகளில் சிறிது குணமடைந்த நோயாளிகள் பொழுதுபோக்கும் விதத்தில், கருத்துப் படங்கள் காட்டப்படுகின்றன; நோயாளிகளுக்கு, நோய்த் தடுப்பு முறை — உணவு முறை ஆகியவை பற்றி படங்களில் நல்ல விளக்கமாகக் காட்டப்படுகின்றன; அதேபோல், தமிழகத்திலும் அறிமுகப்படுத்துவது பொருத்தமானதாகும்; நான் திருவாரூருக்குச் சென்றிருந்தபோது, அங்கு அரசினர் மருத்துவ மனை ஒன்றினைப் பார்வையிட்டேன்; அதில் 'ஆண்களுக்கென்றும்—பெண்களுக்கென்றும் தனித்தனியாக 16 எம்.எம். திரைப் படங்கள் போட்டுக் காட்டலாம்' என்ற யோசனையையும் தெரிவித்திருக்கிறேன்; அதனையொட்டி, தமிழகம் முழுவதிலும் உள்ள பெரிய மருத்துவ மனைகளில் எல்லாம் நோயாளிகளுக்கென்று 16 எம்.எம். திரையரங்குகள் அமைத்தும் படங்கள் காட்டும் முயற்சி மேற்கொள்ளப்படும்."

—மதுரைச் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கையில், இந்திய இராணுவத் தலைவர் ஜெனரல் மானெக்ஷா சுட்டிக் கூறினர்.

போர் வீரர்களுக்கும் — அவர்களின் குடும்பத்தினருக்கும் அவர் புத்தாண்டு வாழ்த்துக் கூறினர்.

இயந்திரங்கள் மற்றும் மூலப் பொருள்களை விட ஊழியர்கள்— அதாவது, அவரவர்கள் தொழிலை கற்றறிந்து நன்கு பயிற்சி பெற்றவர்கள் இன்றியமையாதவர்கள் ஆவார்கள். 1921ல் ஜம்ஷெட்பூர் டெக்னிகல் இன்ஸ்டிட்யூட் நிறுவப்பட்டது முதல், கடந்த 50 வருடங்களாக இந்த உண்மை ஜம்ஷெட்பூரில் வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. வருடம் 29 லட்ச ரூபாய் செலவுத் திட்டப்படி இயங்கிவரும் இந்த இன்ஸ்டிட்யூட் எங்கள் பணித்துறைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு வருகிறது. மானேஜிங் டைரெக்டர் முதல், பள்ளி இறுதிப் படிப்பு முடிந்து பயிற்சி முடித்த முற்றும் புதிய ஊழியர் வரை இங்கு உருவாகின்றனர். பற்பல வருடங்களாக உருப்பெற்றிருக்கும் டெக்னீஷியன்களின் எண்ணிக்கை 19000. தவிர, சுமார் 2000 எஞ்சினீயர்கள் மற்றும் இயக்குன[illegible]குப் பயிற்சி அளித்து கவர்மெண்ட் ஸ்டீல் ப்ளான்ட்களுக்கும் சேவை புரிந்திருக்கிறது.

எங்கள் பலம் உறுதிமிக்க எஃகில் மட்டுமல்ல, திறமைமிக்க ஊழியர்களிலும் உள்ளது.

டாடா ஸ்டீல்

TIV.3419

ஏழு மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல்

மார்ச் 5-ல் துவங்கும்

புதுடில்லி, டிச 30—

வருகிற மார்ச் மாதம் 5-ந் தேதி முதல் 11-ந் தேதி வரையில் ஏழு மாநிலங்களிலும், ஒரு மத்திய ஆட்சிப் பகுதியிலும் சட்டமன்றத்திற்கான தேர்தல்கள் நடைபெறும்.

"ஆந்திரப் பிரதேசம், அசாம், மத்தியப் பிரதேசம், மகாராட்டிரம், ஜம்மு—காஷ்மீர், இமாசலப் பிரதேசம், இராசஸ்தான் ஆகிய மாநிலங்களிலும், மத்திய ஆட்சிப் பகுதியான கோவாவிலும் சட்டமன்றங்களுக்குத் தேர்தல் நடத்துவதென்று தேர்தல் கமிஷன் முடிவு செய்திருக்கிறது"

என்று தலைமைத் தேர்தல் கமிஷனர் எஸ். பி. சென் வர்மா கூறினர்.

"குசராத், பஞ்சாப், மைசூர், மேற்கு வங்காளம், மத்திய ஆட்சிப் பகுதிகளான மணிப்பூர், திரிபுரா ஆகியவற்றில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறையில் இருக்கிறது; அங்கு சட்டமன்றங்களுக்குத் தேர்தல் நடத்துவது சம்பந்தமாகக் குடியரசுத் தலைவரிடமிருந்தோ அல்லது மத்திய அரசாங்கத்திடமிருந்தோ எனக்குக் கடிதம் எதுவும் வரவில்லை" என்று சென் வர்மா கூறினர்.

"ஆந்திரப் பிரதேசம், அசாம், மத்தியப் பிரதேசம், மகாராட்டிரம், காஷ்மீர், இமாசலப் பிரதேசம், கோவா ஆகியவற்றில் உள்ள சட்டமன்றங்களின் ஆயுட்காலம் நாடாளுமன்றத்தின் சட்டத்தின்மூலம் விரிவாக்கப்படவில்லை; எனவே, அங்கு தேர்தல் நடத்தத் தேர்தல் கமிஷன் தற்காலிகமாக முடிவு செய்தது" என்று சென் வர்மா கூறினர்.

செங்கற்பட்டில் மகளிர் விடுதி

சென்னை, டிச. 31—

செங்கற்பட்டில் அரசினர் பெண்கள் விடுதி ஒன்று ரூ. 3.40 இலட்சம் செலவில் கட்ட அரசு அனுமதித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

பத்து அம்ச உர வளர்ச்சி திட்டம்

சென்னை, டிச. 31—

குடியானவர்கள் எல்லாவிதச் சத்தும் உள்ள உர வகைகளைச் சம நிலையில் பயன்படுத்துவதற்கான 10 அம்ச உர வளர்ச்சித் திட்டம் ஒன்றை மத்திய வேளாண்மைத் துறை செயலுக்குக் கொண்டுவர இருக்கிறது.

இந்தத் திட்டத்தின்படி, இந்தியாவில் 70 மண் வகைச் சோதனை நிலையங்கள் துவக்கப்படும்; இவை ஆண்டு ஒன்றுக்கு 30,000 மண் மாதிரிகளைச் சோதனை செய்யும்.

இந்தத் திட்டத்தைப் பற்றி மத்திய அரசின் உர வளர்ச்சி ஆணையர் பருவா தமிழக அரசு அதிகாரிகளுடன் விவாதித்தார்.

உர உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் — வர்த்தகப் பாங்கிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் பருவா விவாதித்தபோது, 'எல்லாச் சத்தும் சம நிலையில் உள்ள உரங்களைப் பரப்புவதில் மாநில அரசுடன் ஒத்துழைக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்; அவர்களும் ஒப்புக்கொண்டனர்.

நான்காவது திட்டத்தில் எஞ்சிய காலத்துக்கு இந்தத் திட்டத்தைப் பரப்ப 5 மாவட்டங்களை மாநில அரசு குறிப்பிட்டுள்ளது.

கடலுக்கு அடியில் ஓட்டல் உருவாகும்

கொழும்பு, டிச. 31—

கடலுக்குள் ஓட்டல கட்டும் திட்டம் ஒன்றுக்கு இலங்கை அரசு, துவக்கக்கட்ட அனுமதி வழங்கியுள்ளது.

இந்த ஓட்டம் கட்டப்பட்டால், உலகிலேயே இதுதான் முதலாவது கடலடி ஓட்டல் ஆகும்.

மேற்கு ஜெர்மனிய முதலீட்டாளர் ஒருவரும் — அரசும் சேர்ந்து இந்த ஓட்டலை உருவாக்குகிறார்கள்.

இதன்மூலம் கிடைக்கும் வருவாயை இலங்கை அரசும், முதலீட்டாளரும் சமமாகப் பகிர்ந்து கொள்வர்.

கண்ணாடிச் சுவர்கள் வைத்துக் கட்டப்படும் இந்த ஓட்டலில் 60 பேர் அமர்ந்திருக்க முடியும்.

மண்ணெண்ணெய்க் கட்டுப்பாடு

சட்ட விதிகளைக் கடைபிடிக்க வேண்டுகோள்

சென்னை, டிச. 30—

மண்ணெண்ணெய்க் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (1966) 3-வது பிரிவின்படி, மண்ணெண்ணெயை, சமையல் — விளக்கெரித்தல் அல்லாத வேறு ஒரு காரணத்திற்காகப் பயன்படுத்துதல் குற்றமாகும்.

எனவே, அதிக அளவு மண்ணெண்ணெயைப் பயன்படுத்துபவர்கள், சூடுபடுத்துவதற்கோ அல்லது சுத்தம் செய்வதற்கோ அதனைப் பயன்படுத்தக்கூடாது.

இன்றியமையாக் காரணங்களுக்கு மண்ணெண்ணெயைப் பயன்படுத்துவது மண்ணெண்ணெய்ச் சட்டத்தின் சில சிறப்பு விதிகள் மூலம் அனுமதிக்கப்படுகிறது; இந்தச் சிறப்பு விதிகள், 'தொழில் நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்கு மண்ணெண்ணெயைத் தவிர வேறு எந்த ஒரு எரிபொருளுக்கும் பயன்படுத்த முடியாது' என்று இருக்கும் காரியங்களுக்கு மட்டும் பொருந்தும்.

மண்ணெண்ணெயைச் சூடுபடுத்துவதற்கும் — சுத்தப்படுத்துவதற்கும் பயன்படுத்துவதை, எந்தவிதத்திலும் இன்றியமையாததாகக் கருத முடியாது.

மண்ணெண்ணெய் மிக இன்றியமையாதது எனக் கோரப்படும் ஒவ்வொரு மனுவிலும், அது எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது — எப்படிப் பயன்படுத்தப்படுகிறது — அந்த ஆக்க வேலைக்கு மண்ணெண்ணெய் தவிர வேறு எந்த எரிபொருளும் பயன்படுத்த முடியாதா என்ற விவரம் தெளிவாக ஆய்வு செய்யப்படும்.

மண்ணெண்ணெய்க் கோரும் தொழில் நிறுவனங்கள், மேற்குறித்த விவரங்களுடன் மண்ணெண்ணெய் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள்பற்றிய முழு விவரங்களையும், இதற்குமுன மண்ணெண்ணெய் பயன்படுத்தப்பட்ட அளவு மற்றும் மண்ணெண்ணெய் அல்லாத வேறு ஒரு எரிபொருளை பெறுவதற்கும் — பயன்படுத்துவதற்கும் எடுத்துக்கொண்ட முயற்சி ஆகிய எல்லா விவரங்களுடனும், 'உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளர், சென்னை-5' என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இதை மீறி மண்ணெண்ணெயைப் பயன்படுத்துபவர்கள், இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின்படி தண்டிக்கப்படுவார்கள்.

மண்ணெண்ணெய்க் கட்டுப்பாட்டுச் சட்டம் (1968) 13-வது பிரிவின்படி, எந்த ஒரு மண்ணெண்ணெய் மொத்த வியாபாரியும், உரிமம் பெறுத மற்ற மொத்த வியாபாரிக்கோ அல்லது பதிவு செய்யப்படாத சில்லறை வியாபாரிக்கோ அல்லது உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளரால் அங்கீகரிக்கப்படாத வேறு ஒரு தனி நபருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ மண்ணெண்ணெய் வழங்கக்கூடாது.

வியாபாரிகள் அல்லாத ஒரு தனி நபருக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ குடிமைப் பொருள் வழங்கு துறை ஆணையின் பெயரில்தான் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படவேண்

சில்லறை வியாரிகள், பெரும் அளவு மண்ணெண்ணெயைப் பயன்படுத்துபவர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்யக்கூடாது; இதை மீறுபவர்கள், பிணைவைப்புத் தொகை (செக்யூரிடி டிபாசிட்) உரிமம் (லைசென்சு) இவைகளை இழப்பதோடு அல்லாமல், இன்றியமையாப் பொருள் சட்டத்தின்கீழும் தண்டிக்கப்படுவார்கள்.

சித்தாமூர் ஆற்றில் அணை கட்ட அனுமதி

சென்னை, டிச. 30—

"மதுராந்தகம் தாலுக்காவில் சித்தாமூர் ஆற்றில் ரூ. 1.75 இலட்சம் செலவில் அணைகட்டுவதற்கு அரசாங்கம் அனுமதித்திருக்கிறது"

என்று செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர் சீதாராமதாஸ் தெரிவித்தார்.

சிம்சன் தொழிலாளர்கள் பிரச்சினை :

அரசியல் காழ்ப்புணர்ச்சியே தகராறுகளுக்குக் காரணம்

வேலைநிறுத்தத் தலைவர்களின் விசித்திரமிக்க சாகசம்

'நல்லதோர் சூழ்நிலையை உருவாக்கத் தொழிலாளர்கள் முன்வருவது அவசியம்'—அமைச்சர் என். வி. நடராசன் விளக்கமும் வேண்டுகோளும்

சென்னை, டிச. 31—

சிம்சன் விவகாரம் குறித்துத் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் விளக்கியிருப்பதாவது :—

" சிம்சன் தொழிலாளர் பிரச்சினையில் அரசுக்கு எதிர்ப்பான நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டிருப்பவர்கள் எவரும் சிம்சன் குரூப் கம்பெனிகளில் ஒன்றில் கூடத் தொழிற் சங்கப் பிடிப்பு இல்லாதவர்கள்; ஆகவேதான், 'தொழிலாளர் பிரச்சினை' என்ற பாதையை விடுத்து -- அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் எதிர்ப்புக் காட்டி வருகின்றனர்.

இவர்களில் வெளிப்படையாக எதிர்ப்பைக் காட்டி வருவோரும், மறைமுகமாகக் கழக அரசை எதிர்த்துவருவோரும் உண்டு.

கம்யூனிஸ்டுத் தலைவர் தோழர் கல்யாணசுந்தரம், இரண்டாவது வகையைச் சார்ந்தவர் என்று கூறினால் மிகையாகாது.

சிம்சன் தொழிலாளர் பிரச்சினையில் வேலை நிறுத்தத் தலைவர்கள், ஒழுங்கு மீறிய செயல்களில் பல முறை ஈடுபட்டுவந்தும்கூட -- குறிப்பாக 16—12—71 அன்று செம்பியத்தில் உள்ள சிம்சன் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட விபரீத விளைவிற்குப் பிறகும்கூட -- முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அரசின் நல்லெண்ணத்தை எடுத்துக்காட்டும் வகையில், 'நான் அளித்த உறுதிமொழிகளை இன்னுங்கூட உறுதிப்படுத்துகிறேன்' என்றும், எனவே, 'தொழில் நிர்வாகிகள் அறிவித்துள்ள நாட்களில் அந்தந்தப் பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்புமாறு கேட்டுக்கொள்கிறேன்' என்றும் சட்டமன்றக் கூட்டத்திலேயே தெரிவித்தார்கள்.

'குறிப்பிட்ட பிரிவுகள் -- குறிப்பிட்ட நாட்களில் தொடர்ந்து திறக்கப்படும்' என்று முதலமைச்சர் தெரிவித்ததற்குக் காரணம், அங்கு ஏற்பட்ட சேதத்தை ஒரே நாளில் ஒழுங்கு படுத்த முடியாத நிலையே தவிர, வேறில்லை; இதனைத் தொழிற் சங்கத் தலைவர்களும் மனதார உணருவர்.

சட்டமன்றத்திலும் -- சட்டமன்ற மேலவையிலும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்த இந்த எண்ணத்தை, கம்யூனிஸ்டுத் தலைவர் கே. டி. கே. தங்கமணியும், சட்டமன்ற மேலவை எதிர்க் கட்சித் தலைவர் இராசாராமும் வரவேற்றதுடன், 'மீண்டும் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லும்போது தொழிற்சாலைக்குள்ளும் போலீசுப் பாதுகாப்பு இருந்தாக வேண்டும்' என்று வற்புறுத்தினர்; இந்த விவரங்களைத் தோழர் கல்யாணசுந்தரம் அறியாதது அல்ல!

எனினும், சிம்சன் கம்பெனியில் வேலை நிறுத்தம் செய்துவரும் ஒரு பிரிவினரை நடத்திச் செல்லும் தலைவர்கள், முதலமைச்சரின் இந்த அறிவிப்புக்குப் பிறகும், 'தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லக்கூடாது' என்றும், 'தொழிற்சாலைகளுக்கு உள்ளே போலீசு காவல் இருக்கக்கூடாது' என்றும், 'ஒரே நாளில் எல்லா யூனிட்டுகளையும் திறந்தாக வேண்டும்' என்றும் நிபந்தனை போட்டு -- வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

இந்த வேலை நிறுத்தத்தில் என்ன விசித்திரம் என்றால், ஒவ்வொரு முறையும் பேச்சுவார்த்தையின்போது அரசின் சார்பில் தெரிவிக்கப்படும் கருத்தை ஏற்றுக் கொள்வதுபோல் அந்தத் தலைவர்கள் உறுதியளிப்பதும், உடன் அதை மீறிவிட்டு -- வேறு நிபந்தனைகளைத் தெரிவிப்பதும் வேலை நிறுத்தம் பிரிவைச் சார்ந்த தலைவர்களின் சாகசமாக இருந்துவருகிறது.

இதற்குப் பிறகும் கம்யூனிஸ்டுத் தலைவர் கல்யாணசுந்தரம் என்னைச் சந்தித்து, 'முதலமைச்சர் அவர்கள் தமது உறுதிமொழியைத் திரும்பப் பெற்றுவிட்டாரே -- இதற்கு வேறு பரிகாரம் காண வேண்டும்' என்றும், '16—12—11 அன்று சிம்சன் கம்பெனி தொழிற்சாலைகளில் தலைவர்கள் செல்லாதிருந்தால் இந்தக் கலவரமே ஏற்பட்டிருக்காது' என்றும், 'முதலமைச்சர் அவர்கள் தமது உறுதிமொழிகளைத் திரும்பப் பெற்றிருக்கிறேன் என்று கூறியதிலும் தவறில்லை' என்றும், 'எத்தனை முறை அவர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார் -- அதை மதிக்கத்தான வேண்டும்' என்றும், 'இருந்தாலும்கூட, மீண்டும் நல்ல சூழ்நிலை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்' என்றும் கூறினார்.

'முதலமைச்சர் அவர்கள், பல முறை அரசின் சார்பில் நல்ல எண்ணத்தை மட்டுமல்ல -- பொறுமையையும் காட்டியிருக்கிறார்; அதைப் பயன்படுத்தித் தொழிலாளர்களின் பிரச்சனையைத் தீர்க்க வேலை நிறுத்தத் தலைவர்கள் அக்கறை காட்டாததை உங்களைப் போன்றவர்கள் கண்டிக்காமல், எங்களிடம் மேலும் மேலும் பேசுவதில் பயனில்லை' என்றும், 'இனி வேலைநிறுத்தத்தில் ஈடுபாடு கொண்டுள்ள தொழிலாளர்கள் தரப்பில் இருந்துதான் கடமையாற்றும் நிலை ஏற்படவேண்டும்' என்றும் தெரிவித்தேன்.

உண்மை இவ்வாறிருக்க, இப்பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட என்னிடம் நான் தெரிவித்த கோரிக்கைகள் என்னவாயிற்று என்று கூடச் சொல்லாமல், 'முதலவர் அவர்கள் உறுதிமொழியைத் திரும்பப் பெற்றுவிட்டாரே' என்று அங்கலாய்த்துக் கொள்கிறாரே -- தோழர் கல்யாணசுந்தரம்.

முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் பதிலளித்தபோது தோழர் கல்யாணசுந்தரம் கோரியிருந்த விவரங்களையும் எடுத்துக் காட்டியிருப்பதை மறைத்துவிட்டு, 'தமக்குத் தெரியாமலே தமக்கு அளித்த உறுதிமொழியைத் திரும்பப் பெற்றுவிட்டாரே' என்று பத்திரிகைகளில் செய்தி விடுத்திருப்பது எந்த வகையில் நேர்மையானதாகும் என்றும் கேட்கிறேன்.

சிம்சன் வேலைநிறுத்தப் பிரச்சினையில் தோழர் கல்யாணசுந்தரத்திற்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமானால், பலமுறை உறுதியளித்த முதலமைச்சரின் நல்லெண்ணத்தை மதித்து நடக்காத வேலைநிறுத்தத் தலைவர்களுக்கு அறிவுறுத்தியிருக்க வேண்டாமா -- அல்லது அந்த அணியிலிருந்து வெளியேறியிருக்க வேண்டாமா என்று கேட்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், வேலைநிறுத்தத் தலைவர்களில் சிலரை அடையாளம் கண்டு கொள்ள முடிகிறது.

ஆனால் கம்யூனிஸ்டுத் தலைவர் தோழர் கல்யாணசுந்தரம் போன்றவர்கள், இந்தப் பிரச்சினையில் மேற்கொண்டிருக்கும் போக்கிலிருந்து அவர்களை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லையென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலைநிறுத்தத்தில் ஈடுபாடு கொண்டுள்ள ஒரு பகுதித் தொழிலாளத் தோழர்கள், இனியாகிலும் முதலமைச்சர் அவர்களின் நல்ல எண்ணத்தில் நம்பிக்கை வைத்து வேலைக்குச் செல்வார்களானால், நல்லதோர் சூழ்நிலையை உருவாக்க முடியும்.

தொழிலாளத் தோழர்களின் அவலநிலையைத் தங்களின் அரசியலுக்கும் -- ஆதிக்கத்துக்கும் பயன்படுத்திவருபவர்களின் வலையில் சிக்கவேண்டாம் என்றுத் தொழிலாளத் தோழர்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

பல்லவா போக்கு வரத்துக் கழகம்

கலைஞர் துவக்கிவைக்கிறார்

சென்னை -- செங்கற்பட்டு மாவட்டப் போக்குவரத்துப் பிரிவுகள் அடங்கிய பல்லவா போக்குவரத்துக் கழகத்தை 3—1—72 மாலை 5-30 மணிக்கு, முதலமைச்சர் டாக்டர் கலைஞர் துவக்கிவைப்பார்.

இவ்விழா, சென்னை உயர் நீதி மன்றத்திற்கு அருகில் உள்ள விரைவுப் பேருந்து நிலையத்தில், அமைச்சர் எஸ், இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

புகழ் பெற்ற விஞ்ஞானி விக்கிரம் சாராபாய் மறைவு

நாட்டின் அணுசக்தி ஆராய்ச்சித் துறைக்கே பெரும் இழப்பு

புதுடில்லி, டிச. 31—

இந்தியாவின் புகழ்பெற்ற அணுசக்தி விஞ்ஞான மேதையும், இந்திய அணுசக்திக் கமிஷன் தலைவரும், டாடா அணு மின்சார நிலைய இயக்குநரும் விண்வெளி ஆராய்ச்சித் துறைத் தலைவருமான விக்கிரம் சாராபாய், நேற்று தமது 52 வயதில் இயற்கை எய்தினார் என்ற செய்தி வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது.

கேரளத்தில் தும்பா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு அருகில் கடற்கரையில் அமைந்துள்ள சுற்றுலா மாளிகையில் நேற்று விடியற்காலை 4 மணியளவில் அவர் மாரடைப்பால் காலமானார். இரவு படுத்தவர் தூங்கிக்கொண்டிருந்த நிலையிலேயே இயற்கையெய்தினார்.

அணு விசைத் துறையில் மிகுந்த ஆர்வமும்--ஆற்றலும் கொண்டிருந்த திரு. சாராபாய், புகழ் பெற்ற அணுசக்தி விஞ்ஞானி பாபா மறைந்த பின், அவரது இடத்தை நிரப்பும் வகையில் அரும் பணியாற்றிவந்தார்.

'தமிழ்நாட்டில் -- கல்பாக்கம் அணு மின்சார நிலையம் விரைந்து உருவாக வேண்டும்' என்பதில் மிகுந்த அக்கறை காட்டினார்.

தமிழ்நாட்டுப் பெண்மணியைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்ட இவர், தமிழ்க் கலையையும் பண்பாட்டையும் மதித்துப் போற்றியவர் ஆவார்.

திருமதி அம்மு சாமிநாதனின் மகளும் -- தற்போதைய தமிழ்நாடு அரசின் [illegible] தலைமை வழக்கறிஞரான [illegible]. கோவிந்தசாமிநாதனின் உடன் பிறப்பும் — புகழ் பெற்ற நாட்டியக் கலைஞருமான திருமதி மிருணாளினியை மணந்து கொண்ட திரு. விக்கிரம சாராபாய்க்கு ஒரு மகனும் -- ஒரு மகளும் உள்ளனர்.

விக்கிரம் சாராபாயின் மறைவுச் செய்தி கேட்டுக் கேரள முதல்வரும் -- மற்ற அமைச்சர்களும் கோவளம் சென்று தங்கள் இறுதி மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனர்.

அங்கிருந்து உடல் பம்பாய்க்கு அனுப்பி வைக்கப்பட்டது.

திரு. சாராபாய் மரணச் செய்தி கேட்டு குடியரசுத் தலைவர் வ. வி. கிரி, இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி உட்பட நாட்டின் பல்வேறு துறைத் தலைவர்களும், கவர்னர்களும், முதலமைச்சர்களும், விஞ்ஞானிகளும் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்தனர்.

தமிழக முதல்வர்

தமிழக முதலவர் கலைஞர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது :—

' ஏற்கனவே பாபாவை இழந்து விட்ட நமக்கு, நல்லதொரு ஆறுதலாக இருந்தார் விக்ரம் சாராபாய்.

' கனிவான்பும் மதி நுட்பமும் வாய்ந்த அந்த ஆர்வமயமான விஞ்ஞானியின் மறைவு எனக்கு பெரும் அதிர்ச்சி தருகிறது.

" சில மாதங்களுக்கு முன்பு அவர் சென்னை வந்து என்னுடன் அக்கறையுடன் விவாதித்த பிரச்சினைகள் எல்லாம் என மனதில் பசுமையாக இருக்கின்றன.

" இந்தப் பெரிய இழப்புக்கு என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

திண்டுக்கல் நகராட்சி தலைவர்

தலைமைக் கழக முடிவு

திண்டுக்கல் நகராட்சி தி. மு. கழக உறுப்பினர்களுக்கும் -- நகராட்சித் தலைவர் திரு. பொன் சீனிவாசன் அவர்களுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த கருத்து மாறுபாடுகளைக் குறித்துக் கலந்து பேசித் தீர்வு காண்பதற்காக 28—12—1971 அன்று சென்னையில், கழகத் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலும் -- பொதுச் செயலாளர் மாண்புமிகு நாவலர் அவர்கள் முன்னிலையிலும், திண்டுக்கல் நகராட்சி தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஒருமனதான முடிவுப்படி, திண்டுக்கல் நகராட்சித் தலைவராகத் தற்போது இருக்கும் திரு. பொன். சீனிவாசன் அவர்களே தொடர்ந்து நகராட்சித் தலைவராகவும், துணைத் தலைவராக இருக்கும் திரு. இஸ்மாயில் சேட் அவர்களே தொடர்ந்து துணைத் தலைவராகவும் பணியாற்றுவார்கள்.

இந்த முடிவுக்கேற்ப, நகராட்சி தி. மு. க. கட்சிக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட அனைவரும் அப்வப்போது விரிவாகக் கருத்துரைகளைப் பரிமாறிக் கொண்டு நகராட்சியின் பணிகளைக் கட்டுப்பாட்டுடன் செவ்வனே ஆற்றிச் சிறப்பிக்குமாறு இதன் மூலம் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் அன்புடன் மீண்டும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

என். வி. நடராசன்
துணைப் பொதுச்செயலாளர்,
தி. மு. கழகம்

நடக்க இருப்பவை

2--1--72

கோவில்பட்டி

நகர தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு கோவில் மேட்டில்; தலைவர் : பூ. செண்பகம்; பேசுவோர் : சுருளிவேல் எம்.எல்.ஏ., கா. காளிமுத்து எம்.எல்.ஏ., வை. கோபாலசாமி, எம். ஆர். சனார்த்தனம், மு. பெரியசாமி, யு. எப். சாமி, கோ. தேவராசன் எம்.சி., அ. மாரியப்பன் எம்.சி., எம். கே. மாரியப்பன்.

அறநிலைய அமைச்சர்

எம். கண்ணப்பன்

நிகழ்ச்சிகள்

சனவரி 1 காலை 10 மணி: குடியேற்றம் — நல்லூர்பேட்டை திருப்புலிநாதர் திருக்கோயிலில் தமிழ் அர்ச்சனை துவக்க விழா.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, ... சென்னை-10) [illegible]